சேர்ந்தவர்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த 78 பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டாலும் மேற்கொண்டும் 300 பேருக்குமேல் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்களே, அவர்களையும் நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 22—4—71 ஆம் ஆண்டு அரசு ஆணையின்படி

Government directs that 78 posts borne on the contingent establishment of P.W.D. as detailed in the annexure to this order to the various P.W.Ds. be provincialised with effect from 22nd April 1971. அது அல்லாமல் இந்த அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல 88 பேர்கள்.

It may be mentioned in this connection that even before the issue of these orders in the above Government Order, the services of 88 posts of the contingent establishment staff were provincialised in P.W.D. in the following Government Orders. There are two or three Government Orders. The Chief Engineer has also sent proposals for permanent retention of 55 posts. It is separately under examination. The proposal of Chief Engineer for framing of *ad hoc* rules for these posts are awaited.

திரு. கே. டி. கே. தங்கமணி : விவரக் குறிப்பிலே 78 பேர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கப்பாலும் நிரந்தரமாக்கப்பட வேண்டியவர்கள் இருக்கிறார்களே. அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான விவரங்களைத் தலைமைப் பொறியாளரிடம் கேட்டிருக்கிறோம்.

They have been provincialised from the date 22nd April 1971. As per G.O. No. 105, dated 25th January 1973, 78 posts had been provincialised. So far as permanent retention is concerned, we are awaiting proposals from the Chief Engineer.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. Minister for P.W.D state as to since how many years these persons have not been provincialised ? Most of them are Sweepers and Watchmen. What is the difficulty in making them permanent workers of P.W.D.?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கெனவே தெரிவித்தபடி 1971-லிருந்து 'ப்ரோவின்சியலைஸ்' செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விவரங்கள் தலைமைப் பொறியாளரிடமிருந்து இன்னும் வரவில்லை.